## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

## பாதுகாப்பு அமைச்சு

# ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) மூலம் நிதியளிக்கப்பட்ட மட்டுப்படுத்தல் நடவடிக்கை மூலம் நிலச்சரிவு பாதிப்பை குறைக்கும் திட்டம் (RLVMMP) - (Loan No: L0124A)

### தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் (NBRI) மூலம் செயற்படுத்தப்பட்டது

# திருத்தம்

2026.05.25 ஆம் திகதி டெய்லி நியூஸ் (28 ஆம் பக்கம்), தினகரன் (20 ஆம் பக்கம்) மற்றும் தினமின (10 ஆம் பக்கம்) செய்திப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட பாதுகாப்பு அமைச்சின் மட்டுப்படுத்தல் நடவடிக்கை மூலம் நிலச்சரிவு பாதிப்பை குறைக்கும் திட்டத்தின் (RLVMMP) கீழ் சிரேஷ்ட புவியியலாளர், பெறுகை/ திட்ட பொறியியலாளர், கணிய அளவையாளர், தொழில்நுட்ப அதிகாரி, முகாமைத்துவ உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளருக்கான வெற்றிடங்கள் தொடர்பானது.

தட்டச்சுப் பிழை காரணமாக, விண்ணப்ப இறுதித் திகதி தவறுதலாக 2026.05.12 என குறிப்பிடப்பட்டுள்ளது. விண்ணப்பங்களை ஏற்கும் சரியான இறுதித் திகதி 2026.06.12 என வாசிக்கவும்.

ஏற்பட்ட அசௌகரியத்திற்கு வருந்துகிறோம்.

**செயலாளர்,**
**பாதுகாப்பு அமைச்சு.**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

**பாதுகாப்பு அமைச்சு**

**தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் (NBRI)**

# ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) மூலம் நிதியளிக்கப்பட்ட மட்டுப்படுத்தல் நடவடிக்கை மூலம் நிலச்சரிவு பாதிப்பை குறைக்கும் திட்டம் (RLVMMP)

**(Loan No: L0124A)**

# வெற்றிடங்கள்

RLVMMP இன் துறை மற்றும் திட்ட முகாமைத்துவ பிரிவில் பின்வரும் பதவிகளுக்காக பொருத்தமான தகுதியை பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு அவர்கள் இலங்கை அரசாங்கத்தின் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 02/2026 ஆம் இலக்க சுற்றுநிருபம் மற்றும் அதற்கு பின்னரான திருத்தங்கள் ஏதேனும் இருந்தால் அதன் நிபந்தனைகளின் அடிப்படையில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படுவார்கள். RLVMMP இற்கு 101.3 மில்லியன் அமெரிக்க டொலர் திட்டப் பெறுமதி ஒன்றுடன் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) மற்றும் இலங்கை அரசாங்கத்தின் (GoSL) மூலம் நிதியளிக்கப்படுகிறது. பாதுகாப்பு அமைச்சு RLVMMP இன் PMU பிரதிநிதித்துவம் செய்யும் நிறைவேற்று நிறுவனம் (EA) என்பதோடு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் (NBRI) பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் செயற்படுத்தும் நிறுவனம் (IA) ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| **01. சிரேஷ்ட புவியியலாளர் (பிரிவு C) 02 பதவிகள்** | புவியியல் வரைபடம் தயாரித்தல், நிலச்சரிவு ஆய்வு, சரிவு நிலைத்தன்மை மதிப்பீடு, மற்றும் துளையிடும் கிணறுகள், மாதிரிகள் சேகரித்தல், மற்றும் கருவி பொருத்துதல் போன்ற புவியியல் தொழில்நுட்ப ஆய்வுகளில் அனுபவம் விரும்பத்தக்கது. அபாய வலய வகைப்படுத்தல் மற்றும் பொருத்தமான தணிக்கை முறைகள், குறிப்பாக வடிகால் அமைப்புகள், தாங்கு கட்டமைப்புகள், மற்றும் உயிரியல் பொறியியல் நடவடிக்கைகள் ஆகியவற்றை பயன்படுத்துவதில் அனுபவம் அவசியம். மேலும் நிலச்சரிவு தணிக்கை அல்லது இடர் முகாமைத்துவ திட்டங்களில் முன் அனுபவம் இருத்தல் வேண்டும். GIS, தொலை உணர்வு, மற்றும் புவியியல்-தொழில்நுட்ப மாதிரியாக்கல் மென்பொருட்கள் (உதாரணமாக GeoStudio, RockScience) ஆகியவற்றைப் பயன்படுத்துவதன் திறன் விரும்பத்தக்கது.<br><br>02/2026 MSD சுற்றுநிருபத்தின் C பிரிவு இணைப்பு – 01 இற்கு தொடர்புடைய II மற்றும் II பக்கங்களின் 02ஆவது பத்தியின்படி தேவையான தகைமைகள் மற்றும் அனுபவம். | **02. பெறுகை/ திட்ட பொறியியலாளர் (பிரிவு D) 01 பதவி** | கேள்விமனு செயன்முறை, மதிப்பீடு மற்றும் ஒப்பந்த முகாமைத்துவம் உள்ளிட்ட பெறுகை செயன்முறைகளில் அனுபவம் விரும்பத்தக்கது. அதேபோன்று திட்ட திட்டமிடல், தள மேற்பார்வை, அட்டவணை அமைத்தல் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் ஆலோசகர்களுடன் ஒருங்கிணைப்பு ஆகிய திறன்களும் அவசியம். பணிகள் காலக்கெடுவிற்குள் மற்றும் ஒதுக்கப்பட்ட வரவு செலவு திட்டத்திற்குள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்யும் வகையில், பணிகளின் பௌதிக முன்னேற்றம் மற்றும் நிதி முன்னேற்றம் ஆகியவற்றை கண்காணிக்கும் நடைமுறை அனுபவமும் இருத்தல் வேண்டும். உள்ளூர் விதிமுறைகள், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் தேவைகள் பற்றிய அறிவும், பங்குதாரர்கள் முகாமைத்துவத்திற்காக வலுவான தொடர்பு மற்றும் பேச்சுவார்த்தை திறன்களும் இருத்தல் வேண்டும்.<br>02/2026 MSD சுற்றுநிருபத்தின் D பிரிவு இணைப்பு – 01 இற்கு தொடர்புடைய V மற்றும் VI பக்கங்களின் 02ஆவது பத்தியின்படி தேவையான தகைமைகள் மற்றும் அனுபவம். |
| **03. கணிய அளவையாளர் (பிரிவு D) 01 பதவி** | நிர்மாணப் பணிகள் மற்றும் பொருட்கள் ஒப்பந்தங்களுக்கான பெறுகை மற்றும் ஒப்பந்த நிர்வாகத்தின் முழு செயன்முறையிலும் அனுபவம் விரும்பத்தக்கது. இதில் கேள்விமனு ஆவணங்கள் தயாரித்தல், அளவுக் கணக்குப் பட்டியல் மற்றும் கட்டமைப்பு வளர்ச்சி அல்லது தொடர்புடைய திட்டங்களுக்கான செலவுக் கணக்கீடுகள் தயாரித்தல் ஆகியவை அடங்கும். மேலும் ஒப்பந்தக்காரர்களின் விலைமனு மற்றும் வழங்குநர்களின் முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து, வெளிப்படையான மற்றும் போட்டித்தன்மை வாய்ந்த முறையில் ஒப்பந்தம் வழங்குவதற்கு ஆதரவு அளிக்கும் திறன் இருத்தல் வேண்டும். மேலும், ஒப்பந்த நிபந்தனைகள், சரிபார்க்கப்பட்ட அளவுகள் மற்றும் தரநிலைகளுக்கு ஏற்ப இடைக்கால மற்றும் இறுதி கட்டணச் சான்றிதழ்களை சரிபார்க்கவும் மற்றும்/ அல்லது தயாரிக்கவும் முடியும் திறன் அவசியம். வடிவமைப்பு மாற்றங்கள், எதிர்பாராத நிலத்தடி நிலைமைகள் அல்லது தொழில்நுட்ப தேவைகள் காரணமாக ஏற்படும் மாற்றங்களை மதிப்பீடு செய்து அவற்றின் செலவைக் கணக்கிடும் அனுபவம் இருத்தல் வேண்டும். மேலும் நேரம், செலவு அல்லது பணியின் வரம்பு தொடர்பான ஒப்பந்த மற்றும் ஒப்பந்தத்திற்கு வெளியான கோரிக்கைகளை பரிசீலித்து, தயாரித்து மற்றும் பேச்சுவார்த்தை நடத்தும் திறன் அவசியம். ஒப்பந்த நிர்வாகம், ஆவண முகாமைத்துவம் ஆகியவற்றில் வலுவான திறமை மற்றும் பிரச்சினை தீர்வு, செயன்முறைகளுக்கு ஆதரவு வழங்கும் திறன் விரும்பத்தக்கது.. இதன் மூலம் நிர்மாணப் பணிகள் மற்றும் பொருட்கள் ஒப்பந்தங்கள் திட்ட நோக்கங்களுக்கேற்ப, பொருளாதார ரீதியாகவும் திறமையாகவும் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டவாறும் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.<br><br>02/2026 MSD சுற்றுநிருபத்தின் D பிரிவு இணைப்பு – 01 இற்கு தொடர்புடைய V மற்றும் VI பக்கங்களின் 02ஆவது பத்தியின்படி தேவையான தகைமைகள் மற்றும் அனுபவம். | **04. தொழில்நுட்ப அதிகாரி<br>பிரிவு - F<br>01 பதவி** | தொழில்நுட்ப விபரக்குறிப்புகளை சரிபார்த்து, துல்லியமான ஆவணங்களை பராமரித்து, பெறுகை செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கும் திறனும் தேவை. மேலும் தொழில்நுட்ப அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் பல்துறை குழுக்களுடன் ஒருங்கிணைந்து திட்ட செயல்பாடுகள் சீராக நடைபெற உதவுதல் வேண்டும். மூத்த பொறியியல் பணியாளர்களின் வழிகாட்டுதலின் கீழ், திட்ட செயற்பாடுகள் தரம், விதிமுறையை பின்பற்றல் மற்றும் காலக்கெடு பூர்த்தி ஆகியவற்றை உறுதி செய்யும் அனுபவமும் விரும்பத்தக்கது. தொழில்நுட்ப அதிகாரி நிலச்சரிவு தடுப்பு திட்டத்திற்கு தேவையான முக்கிய தொழில்நுட்ப மற்றும் செயற்பாட்டு ஆதரவுகளை வழங்குதல் வேண்டும். அவர் திட்ட பணிப்பாளரால் நியமிக்கப்பட்டபடி மூத்த புவி தொழில்நுட்ப பொறியியலாளர், புவி தொழில்நுட்ப பொறியியலாளர், தள பொறியியலாளர் அல்லது திட்ட பொறியியலாளர் ஆகியோருக்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.<br><br>02/2026 MSD சுற்றுநிருபத்தின் F பிரிவு இணைப்பு – 01 இற்கு தொடர்புடைய x மற்றும் xi பக்கங்களின் 02ஆவது பத்தியின்படி தேவையான தகைமைகள் மற்றும் அனுபவம். |
| **05. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) (உதவி பணியாளர்)<br><br>01 பதவி<br><br>முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) (உதவி பணியாளர்)** | திட்ட அலுவலகத்தின் திறமையான செயற்பாட்டுக்கு உதவவும்/ஆதரிக்கவும் கூடிய முழுமையான நிர்வாகத்துடன் கூடிய ஆனால் தொழில்நுட்ப அம்சங்களையும் உள்ளடக்கிய பணியில் அனுபவம் விரும்பத்தக்கது. இதில் நாளாந்த அலுவலக செயற்பாடுகளை நிர்வகித்தல், கடிதங்கள் தயாரித்தல், கோப்புகளை பராமரித்தல் மற்றும் ஆவணப்படுத்தல் ஆகியவை அடங்கும். மேலும் அறிக்கைகள் மற்றும் விளக்கக்காட்சிகள் தயாரித்தல், பாதுகாப்பு, தொழில்நுட்ப, பெறுகை தொடர்பான கூட்டங்கள், பணிப்பட்டறைகள் மற்றும் திட்ட நிகழ்வுகளை ஒருங்கிணைத்தல் ஆகியவற்றிலும் அனுபவம் இருத்தல் வேண்டும். திட்டக் குழுவுக்கான வெளிப்புற நடவடிக்கைகளை எளிதாக்கும் வகையில் போக்குவரத்து, தங்குமிடம் மற்றும் தேவையான பொருட்கள் ஏற்பாடு செய்வதில் அனுபவம் இருத்தல் வேண்டும். திட்ட செயற்பாடுகள், பணியாளர்கள் வருகை, பயண விபரங்கள் போன்றவற்றை துல்லியமாக பதிவு செய்து பராமரிக்கும் திறனும் அவசியம். திட்ட பணியாளர்கள் மற்றும் முகாமைத்துவத்திற்கு தேவையான நிர்வாக ஆதரவை வழங்கும் திறன் கூடுதல் நன்மையாக கருதப்படும். திட்டத்தின் சீரான மற்றும் திறமையான செயற்பாட்டை உறுதி செய்வதில் முக்கிய பங்காற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.<br><br>**தகைமைகள் மற்றும் அனுபவம்**<br><br>a) க.பொ.த. (சா/த) சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கிலம் மற்றும் கணிதம் உட்பட நான்கு பாடங்களுக்காக திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>b) க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.<br><br>c) மூன்றாம்நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட Word Processing (MS Word) கற்கை ஒன்றை பூர்த்தி செய்திருத்தல் அல்லது இதனையொத்த/ உயர் தேர்ச்சிகளை பெற்றிருத்தல்.<br><br>d) மூன்றாம்நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட NVQ – 04 அல்லது அதற்கு மேல் தொடர்புடைய தொழில்நுட்ப தகைமையை பூர்த்தி செய்திருத்தல் அல்லது இதனையொத்த/ உயர் தேர்ச்சிகளை பெற்றிருத்தல்.<br><br>e) தொடர்புடைய துறையில் குறைந்தது இரண்டு (02) ஆண்டுகள் வேலை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.<br><br>f) வழக்கமான அலுவலக சூழலில் மற்றும் வெளிநாட்டு நிதியுதவியுடன் செயற்படும் திட்டங்களில் பணியாற்றிய அனுபவம் கூடுதல் நன்மையாக கருதப்படும்.<br><br>02/2026 MSD சுற்றுநிருபத்தின் பக்கம் 09 இல் 3.2.3. உறுப்புரையின்படி சம்பளம் தீர்மானிக்கப்படும். (அரச சேவையில் இதனையொத்த பதவிக்கான ஆட்சேர்ப்பு நிலையில் தொடர்புடைய சம்பள அளவின் ஆரம்ப நிலை ஊதியம் மற்றும் அப்பதவிகளுக்கு உரிய கொடுப்பனவுகள் ஆகியவற்றுடன், குறிப்பிட்ட பதவிகளுக்குரிய ஆரம்ப ஊதியத்தின் 50% கூடுதலாக வழங்கப்படும்) | **06. அலுவலக உதவியாளர் (உதவி பணியாளர்)<br>01 பதவி** | திட்ட அலுவலகத்தின் சீரான செயற்பாட்டை உறுதி செய்ய தேவையான ஆதரவை வழங்கிய அனுபவம் விரும்பத்தக்கது. இதில் கோப்பிடுதல், நகல் எடுதல், ஆவண முகாமைத்துவம் மற்றும் துல்லியமான பதிவுகளை பராமரித்தல் போன்ற பொதுவான நிர்வாக பணிகளில் உதவுதல் அடங்கும். அலுவலக உபகரணங்கள் மற்றும் பொருட்களை நிர்வகிப்பதும் இதில் அடங்கும். திட்டம் தொடர்பான பொருட்களை தயாரித்து விநியோகிப்பதற்கும் ஆதரவு வழங்குதல் வேண்டும். மேலும் அலுவலக சூழல் சுத்தமாக, ஒழுங்காக மற்றும் நன்கு பராமரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்தல் வேண்டும். இதில் துடைத்தல், சுத்தம் செய்தல் மற்றும் அடிப்படை பராமரிப்பு பணிகளும் அடங்கும். அலுவலக உதவியாளர் திட்ட பணியாளர்களுடன் நெருக்கமாக இணைந்து நாளாந்தச் செயற்பாடுகளை எளிதாக்கி, அலுவலகம் திறமையாகவும் தொழில்முறை அமைப்பிலும் செயற்பட உதவுதல் வேண்டும்.<br><br>**தகைமைகள் மற்றும் அனுபவம்**<br><br>a) க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி மற்றும் கணிதம் உட்பட இரு திறமைச் சித்திகளுடன் இரு அமர்வுகளில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>b) க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் கூடுதல் தகைமையாக கருதப்படும்.<br><br>c) தொடர்புடைய துறையில் குறைந்தது இரண்டு (02) ஆண்டுகள் வேலை அனுபவம் விரும்பத்தக்கது என்பதோடு வழக்கமான அலுவலக சூழலில் மற்றும் வெளிநாட்டு நிதியுதவியுடன் செயற்படும் திட்டங்களில் பணியாற்றிய அனுபவம் கூடுதல் நன்மையாக கருதப்படும்.<br><br>d) தமது பணிகளை மேற்கொள்வதற்கு ஊழியர் சிறந்த உடல் மற்றும் உள நிலையை பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>02/2026 MSD சுற்றுநிருபத்தின் பக்கம் 09 இல் 3.2.3. உறுப்புரையின்படி சம்பளம் தீர்மானிக்கப்படும். (அரச சேவையில் இதனையொத்த பதவிக்கான ஆட்சேர்ப்பு நிலையில் தொடர்புடைய சம்பள அளவின் ஆரம்ப நிலை ஊதியம் மற்றும் அப்பதவிகளுக்கு உரிய கொடுப்பனவுகள் ஆகியவற்றுடன், குறிப்பிட்ட பதவிகளுக்குரிய ஆரம்ப ஊதியத்தின் 50% கூடுதலாக வழங்கப்படும்) |

**பொதுவான நிபந்தனைகள்**

1. கீழ் குறிப்பிடப்பட்டவாறு விண்ணப்பங்களை ஏற்கும் மற்றும் மூடும் இறுதித் திகதியில் விண்ணப்பதாரர்கள் 64 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. பணியமர்த்தப்படும் அனைவரும் அரச அமைப்புகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு தொடர்புடைய தொடர்பு மற்றும் ஒருங்கிணைந்த செயற்பாடுகளில் தமது பணிகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றனர்.
3. வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட திட்டங்களில் வேலை அனுபவம் மேலதிக அனுகூலமாகும்.
4. ஆங்கில மொழியில் தேர்ச்சி, அரச ஒழுங்குமுறைகளில் பரீட்சயம் மற்றும் கணினி அறிவு மேலுள்ள பதவிகளுக்கு அத்தியாவசிய முன் தேவைகளாகும்.
5. அரச அமைச்சுகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சட்டரீதியான சபைகள், மற்றும் நிறுவனங்களின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்ட ஆபேட்சகரை விடுவிக்க முடியும் என்பதை குறிப்பிட்டு குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

**சம்பளம்:**

6. 02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றுநிருபம் மற்றும் ஏதேனும் அதன் மாற்றங்களின்படி கொடுப்பனவுகளுடன் வழங்கப்படும். (ஊழியர் மாதச் சம்பளத்தின் 8% ஐ ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யும் அதே நேரம் தொழில்வழங்குநர் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 12% உம் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் 3% உம் பங்களிப்புச் செய்வார்.)

**விண்ணப்பங்கள்:**

7. தகுதி பெற்ற அபேட்சகர்கள் தொடர்புடைய கல்வி, தொழில்முறை மற்றும் அனுபவ சான்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளுடன் சேர்த்து உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் தொடர்பு விபரங்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட சுயவிபரக்கோவையுடன் சேர்த்து விண்ணப்பிக்கும் பதவிகளுக்கான தமது பொருத்தம்/ தகைமையை நிரூபிக்கும் முகப்பு கடிதம் ஒன்றுடன் தமது விண்ணப்பத்தை அனுப்புவதற்கு கோரப்படுகின்றனர். அவ்வாறு இல்லாவிட்டால், குறித்த விண்ணப்பங்கள் தேர்வுக்கு கருத்தில்கொள்ளப்படமாட்டாது.
8. விண்ணப்பதாரர்கள் உறவினர் அல்லாத இரு நடுவர்களின் தொடர்பு விபரங்களுடன் கல்வி, தொழில்முறை தகைமைகள் மற்றும் அனுபவத்தை உள்ளடக்கிய தமது சுயவிபரக்கோவையுடன் சேர்த்து ஒவ்வொரு பதவிக்காகவும் வெவ்வேறாக தமது விண்ணப்பங்களை கீழ் தரப்பட்ட முகவரிக்கு 2026 மே 12 அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் சமர்ப்பிப்பதற்கு கோரப்படுகின்றனர். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவும்.

   **தபால் முகவரி:** திட்டப் பணிப்பாளர், திட்ட முகாமைத்துவ பிரிவு, மட்டுப்படுத்தல் நடவடிக்கை மூலம் நிலச்சரிவு பாதிப்பை குறைக்கும் திட்டம் (RLVMMP), தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம், 99/1, ஜாவத்த வீதி, கொழும்பு 05, தொடர்பு இல.: 011 – 2559869
9. உயர் தகைமை மற்றும் அனுபவம் அடிப்படையில் குறுகிய பட்டியலில் சேர்க்கப்படும் அபேட்சகர்கள் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்காக அழைக்கப்படுவதோடு தகுதி அடிப்படையில் தேர்வு இடம்பெறும்.
10. ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு எந்த வகையான செல்வாக்கு அல்லது பிரதிநிதித்துவம் ஒன்றை மேற்கொள்ளல் விண்ணப்பம் நிராகரிப்பதற்கு காரணமாகலாம்.

**செயலாளர்**
**பாதுகாப்பு அமைச்சு**